திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

திருமந்திர மாநாடு

வாழ்த்துரை

தருமபுர ஆதீனம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்

அருளியது.

உ

அன்பே சிவம்

திருச்சிற்றம்பலம்

அரகர என்ன அரியதொன் றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப் பன்றே.

திருச்சிற்றம்பலம்



ஸ்ரீ திருமூலதேவநாயனர்

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

25-வது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவாவடுதுறை ஆதீனத்தில் 31-1-'54ல் தொடங்கி நிகழும்

திருமந்திர மாநாட்டிற்கு

அளித்தருளிய

திருமந்திரக்கருத்தும் வாழ்த்துரையும்

"அவனே தானே ஆகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே."

(சிவஞானபோதம் 10)

"தானவ னாக அவனேதா னயிட
ஆன இரண்டில் அறிவன் சிவமாகப் போனவன்."

(திருமந்திரம் 1011.)

"நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்."

(திருத்தொண்டத்தொகை)

"குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் றன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படியேபர விட்டெனுச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூல னாகிய அங்கணனே."

(நம்பியாண்டார் நம்பி திருவந்தாதி.)

"தடநிலைமா ளிகைப்புலியூர் தன்னிலுறைந் திறைஞ்சிப்போய்
அடல்விடையின் மேல்வருவார் அமுதுசெய அஞ்சாதே
விடமளித்த தெனக்கருதி மேதினிக்கு வளநிறைத்தே
கடல்வயிறு நிறையாத காவிரியின் கரையணைந்தார்."

(பெரியபுராணம்.)

நாம் வாழ்கின்ற பரதகண்டமே உலகில் மிகச்சிறந்தது காரணம் **கர்மபூமி**. கர்மத்திலும் புண்ணியகர்மம். புண்ணியத்தின் பயன் ஞானம். அந்த ஞானம் வேறு எந்தப் பூமியிலும் இங்குள்ளவாறு விளங்காமையால், இதையே எல்லா நாட்டாரும் **ஞானபூமி** என்று போற்றுகின்றனர். கர்மத்தால்தான் ஞானம் உண்டாகும். சித்த சுத்தியே நல்ல வினைகளைச் செய்யத்தூண்டும். தருமமே சித்தசுத்தியை ஆக்கும்; சாந்தியை உண்டாக்கும். சாந்தியே அட்டாங்க யோகத்தைத் தோற்றும். இவ்வுண்மையை எங்கள் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் வேதப்பொருள் அருளும்போது முனிவர்கட்குச் சொல்லியருளினர்:—

ஞானபூமி:

"கருமத்தால் ஞானம் உண்டாம் கருமத்தைச் சித்த சுத்தி
தரும்அத்தால் இகந்த சித்த சுத்தியைத் தருமம் நல்கும்
அருமைத்தாம் தருமத் தாலே சாந்தியுண் டாகும் மாண்ட
பெருமைத்தாஞ் சாந்தி யாலே பிறப்பதட் டாங்க யோகம்"

ஞானம் ஒன்றே சிவபக்தியை விளைக்கும். சிவபூஜை, சிவதரிசனம், சிவலிங்கஸ்தாபனம், அடியார் வழிபாடு, சிவசாதனம், குருபக்தி முதலிய எல்லாம் ஞானத்தால்தான் விளங்கும்.

அத்தகைய பெருமைமிக்க ஞானத்தை எல்லாமக்களும் பெற்றுய்ய முயற்சி செய்யவேண்டும். அதைப்பெறாத காலம் உலகிற்கு இருட்காலம். அதாவது உலகமே இருண்டுவிடும். ஞானம் பெற்ற உலகமே ஒளியுலகம், உலகம் எப்பொழுதும் ஒளியால் விளங்கவேண்டினால், மக்கள் ஞானத்தோடு விளங்கவேண்டும். அஞ்ஞான உலகம் இருளுலகம். இதைச் சமீபகாலம்வரையில் தமிழ்நாடு

ஞானசாதநம்:

அநுபவித்தது, இப்பொழுது இருள் நீங்கி வருகின்றது; ஒளி ஓங்கிவருகின்றது. காரணம் வேதாகம உண்மைகள் பரவுகின்றதே. வேதங்களும் ஆகமங்களும் ஞானத்தை உபதேசிப்பவை. ஞானத்தை விளக்கும் கர்மங்களை உணர்த்துபவை. கர்மங்களைச் செய்யும்போது, தவறாமல், பாவனைகளுடன் உச்சரிக்கத்தக்க மந்திரங்களை விளக்குபவை இக்காரணத்தால் மந்திரகலை, தந்திரகலை, உபதேசகலை என்னும் மூவகையாயிற்று ஆகமப்பிரமாணம்.

வேதாகமச் சிறப்பு : வேதாகம நூல்களே உயிர்க்கு உறுதியை உணர்த்துகின்றவை. மற்றைய நூல்கள், அவற்றின் பொருளையே விரித்தும் தொகுத்தும் கூறுகின்றவை. கூட்டியும் குறைத்தும் சொல்லும் நூல்களும் வேதாகமங்களிற் சொல்லாதவற்றைத் தெரிவிக்க மாட்டா.

"வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்"

என்பது எங்கள் ஆதீனங்களின் சிவஞானசித்திநெறியுண்மை.

தோத்திரமும் சாத்திரமும் : வேதங்களும் ஆகமங்களும் வடமொழியிலிருக்கின்றன. அவை தமிழர் பலருக்கும் பயன்படும்பொருட்டு, திருவருள் உள்நின்று உணர்த்த, பெரியோர்கள் பலர் அவதாரம் செய்து, வேதாகமப் பொருள்களைத் தமிழில் தோத்திரமும் சாத்திரமுமாகப் பாடியருளினர்கள். எல்லாம்வல்ல மெய்ப்பொருள் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் வகையுள் தோத்திரமும் சாத்திரமுமாக விளங்குகின்றார். அதனால்தான் அப்பர் சுவாமிகள்,

"தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே"

என்றருளினார்கள். தமிழில் தோத்திரங்கள் பன்னிரு திருமுறைகள். சாத்திரங்கள் பதினான்கு மெய்கண்ட நூல்கள், அம்மெய்கண்ட நூற்பொருள்களை அருளிய அருட்குருமார்களின் பரம்பரையே திருக்கயிலாய பரம்பரையாகும். அந்தப் பரம்பரையில் விளங்கும் **சைவத் திருமடங்களே சிவஞானோபதேசத்துக்குரிய இடங்கள்.** அவற்றுள் **திருவாவடுதுறை மடாலயமும்** ஒன்று.

திருவாவடுதுறை மடமும், மயிலாடுதுறைத் தருமபுர மடமும், குரங்காடுதுறைச் சூரியனார்கோயில் மடமும்.

கயிலைக் காட்சி : அமைந்துள்ள தலங்கள் அரிய திருக்கயிலாயத்தை நினைப்பூட்டும் எளிய திவ்யக்ஷேத்திரங்களாகும், வேறு எங்கு இவற்றின் இயற்கையழகைக் காணமுடியும்? இவற்றைப்போல் நீர் நிலவளமும் சோலை வளமும் நிறைந்துள்ள இயற்கையழகைப் பல இடங்களில் காணலாம். சிவப்பிரகாசத்தை உடன்கொண்டு திகழும் இயற்கை அழகுள்ளனவாக வேறு இல்லை என்று பலர் புகழ்கின்றனர். இதனாலும் முழுமுதலைத் 'தென்னாடுடைய சிவன்' என்றது பொருந்துமாறு அறியப்படும்.

திரு+ஆ+அடு+துறை என்று பிரித்துப் பொருள் கூறினர் பெரியோர். சிவபெருமான் கட்டளையிட்டருளியபடி

திருவாவடுதுறை : அம்பிகைக்கு உண்டான பசுவடிவம் இத்தலத்தில் நீங்கிய காரணம்பற்றியது இப்பெயர். ஆ – பசு. ஆடுதல் – நீக்குதல். அம்பிகைக்குப் பசுரூபம் நீங்கியதுபோலவே, கோமுத்திபுரம் என்னும் இத்தலத்தை வழிபடும் ஆன்மாக்களுக்கு பசுத்துவம் நீங்கும். இவ்வுண்மையை வழிபட்டால் உணரலாம். வணங்கியவருக்கு மும்மலமாசுகளும் இல்லாதபடிசெய்யும் இத்தலத்தில் திருக்கோயில்கொண்டெழுந்தருளியுள்ள முதல்வனை **மாசிலாமணி** என்று போற்றுவார். அம்மணியைக்கொண்டு **நமசிவாயத்தை** இடைவிடாமல் ஜபித்தால் **ஞானசம்பந்தர்** ஆகிப் **பேரின்பம்** உறலாம்.

துறைசையில் தோன்றிய திருமுறை:

இத்திருவாவடுதுறை பெருஞ்சிறப்புடையது. அச்சிறப்புக்களுக்குக் காரணம் பல உண்டு. திருமூலதேவ நாயனர் ஓராண்டு ஈராண்டல்ல; மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தார். அதுவும் யோகம் புரிந்துகொண்டு. ஹட யோகமோ? அன்று சிவயோகம். அந்தச் சிவயோகம் அவர்க்கு மட்டுமோ பயன்பட்டது? உலகத்திற்கே பயன்பட்டது. அன்று மட்டுமோ? இன்றும் என்றும் பயன்படத் **'திருமந்திரமாலை'**யாகி ஞானசொரூபத்தை உடையதாகி நிலைபெற்றிருக்கின்றது.

சித்தர் உறைவிடம்:

போகநாத சித்தர், திருமாளிகைத்தேவர் முதலிய சிவயோக சித்தர் வாழ்ந்த திவ்விய தலம் திருவாவடுதுறை. திருவிசைப்பா என்னும் ஒன்பதாவது திருமுறையை அருளிய ஒன்பதின்மருள் இத்திருமாளிகைத்தேவரே முதல்வர். இங்குத் தவஞ்செய்த சித்தர் ஒருவரா? இருவரா? ஒன்பதுகோடி சித்தர்கள் தவஞ்செய்த காரணத்தால் நவகோடி சித்தபுரம் என்ற பெயர் பெற்றது. இதில் எப்போதும் சித்தர் வாழ்வதாகப் பெரியோர் கூறுகின்றனர்.

திருஞானசம்பந்த சுவாமிகள், தந்தையார் வேள்வியை நிறைவேற்றற்கு ஆயிரம்பொன் பெற்றதலம் இதுவே. இவ்வாய்மையை 'கழுமலவூரர்க்கு அம்பொன் ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடுதுறையனுரே' என்றருளினர் திருநாவுக்கரசர். தேவர்கள் அரசுகளாயிருக்கும் இத்தலத்துப் பெருமான் முசுகுந்தர்க்குத் திருவாரூரும் தியாகேசருமாகிக் காட்சிதந்த மாட்சியுடன் மகப்பேறும் அளித்துப் 'புத்திரத்தியாகர்' என்ற திருப்பெயர் கொண்டார். 'சிறைவண்டார் பொழில்சூழ் திருவாரூர்ச் செம்பொனே! திருவாவடுதுறையுள் அறவனே! எனை அஞ்சல் என்றருளாய்' என்று சுந்தரமூர்த்திசுவாமிகள் வேண்டியதில் இவ்வுண்மை விளங்குகின்றது. இங்கு, தருமதேவதையை இடபமாக்கொண்டு, அதற்கு 'அரசு' ஆகிய தலவிருட்சத்தின் நிழலில்வாழும் வரம் அளித்தார்.

அரசம்பலமும் அதில் இறைவன் புரியும் மகாதாண்டவமும் முக்கியமாகத் தரிசித்தற்கு உரியவை. முனிவர்கள் சிவஞானம் உபதேசிக்கப் பெற்றூர்கள்.

பல்வேறு சிறப்பு :

அந்தணர்கள் வேதத்தை அருளப்பெற்றூர்கள். சித்தர்கள் அஷ்டமாசித்தி முதலிய நலமெலாம் உற்றூர்கள். அத்தகைய சிறப்புமிக்க திருவாவடுதுறையில் இன்றும் ஆன்மாக்களைப் பவக்கடலின் நின்றும் முத்திக்கரை ஏற்றியருளும் பொருட்டு, திருவாவடுதுறை ஆதீனஸ்தாபகராகிய ஸ்ரீ முக்திபஞ்சாக்கர தேசிகர், முருகப்பெருமானுகத் தோற்றம் அளித்து, அன்பர்களை உய்வித்தருள்கின்றூர்.

ஆன்மாக்கள் சாத்திரங்களைக் கற்பதால்மட்டும் வீடு பெறமாட்டா. நூல்மரபு வேறு. உபதேச மரபு வேறு.

சைவத்தின் இருவேறு மரபு:

சாத்திரங்கள் ஏட்டிலிருந்த காலம்போய், அச்சில் வந்து ஆண்டு பல ஆயின. ஆகியும் வீடுபேற்றிற்குரிய உண்மை ஞானம் எங்கே உண்டாயிற்று? நூல் மரபுடன் உபதேச மரபும் இருந்தால்தான் ஆன்மாக்கள் உண்மை ஞானத்தைப் பெறக்கூடும். அதற்கென்றே சைவமடங்கள் தோன்றி உபதேசித்து வந்தன. நூல்கள் அவ்வுபதேசம்பெறத் துணையாயின. ஆகவே, நூல்களை அருளவும் பலர் அவதரித்தார்கள். அவருள் திருமூலதேவநாயனுரும் ஒருவர்.

திருமூலதேவநாயனுர் வரலாறு

திருக்கயிலைக்கு நாயகரான நந்திதேவரது திருவருள் பெற்ற நான்மறையோகி ஒருவர், அகத்தியமுனிவர் நட்பால், பொதியமலையை நாடிக் கயிலையினின்றும் வருகின்றூர்.

நாயனுர் வரவு :

வழியில் திருக்கேதாரம், பசுபதி நேபாளம் முதலியவற்றை வழிபட்டார். கங்கைத்துறையாடினுர். சீபர்ப்பதம் வணங்கினுர். திருக்காளத்தியை அடைந்தார். எந்நாட்டவர்க்கும் இறைவன் தென்னுடுடைய

சிவனே ஆதலின் அவனை அங்குத் தரிசித்து, திருவாலங் காட்டை உற்றார். திருக்கச்சியில் சிறிதுகாலம் வாழ்ந்து வழிபட்டார். அங்கிருந்த சிவயோக முனிவர்களை நேசித்தார். திருவதிகைமாநகரைத் தொழுதார். பெரும்பற்றப்புலியூர்ச் சிற்றம்பலத்தை நண்ணினார். எவ்வுலகும் உய்யத் தூக்கிய திருவடியை நோக்கி அன்புருவாய் நின்றார். ஆநந்தக்கூத்தை உண்மையுணர்வில் கும்பிட்டார். ஆராத இன்ப அமுது உண்டார்.

பின்பு, காவிரிக்கரை போந்தார். கங்கைக்கும் புனிதம் பெருக்கும் அக்காவிரியில் முழுகினார்; எழுந்தார்; நடந்தார்.

துறைசைத் தொடர்பு: ஆவின் அருங்கன்று உறையும் ஆவடு துறையை அணைந்தார். பசுபதியார் செழுங்கோயிலை வலம் வந்தார் அத்தலத்தை அகலா திருக்கும் கருத்து அருவப்பெற்றார். அது விருப்பமாய்ப் பெருகிற்று. பெருகினாலும், துறைசையை அகன்று புறஞ் சென்றார்.

அப்பொன்னியாற்றங்கரையில், முல்லைநிலத்தில், பசுக் கூட்டங்கள் புலம்பும் குரலைக் கேட்டார். அப்புலம்புதலைக் கேட்ட கயிலையோகர், விரைந்து அங்குச் சென்று கண்டார்.

பரகாயப் பிரவேசம்: அப்பசுக்களை மேய்த்த ஆயன் இறந்து கிடந்தான். அவனைச்சூழ்ந்து பசுக் குழாங்கள் கதறியும் சுழன்றும் மோந்தும் புலம்பிக்கொண் டிருந்தன. அதுகண்ட இரக்கமே வடிவான அச்சிவயோகர், இவன் மீண்டும் உயிர்த்தாலன்றி இப்பசுக்கள் துன்பம் நீங்காது என்று எண்ணினார். அவன் உடம்பில் தம் உயிரை அடைவிக்கக் கருணைகொண்டார். உடனே தம் உடம்பிற்குக் காப்புச் செய்தார். யோகமார்க்கத்தில் அவன் உடலிற் புகுந்தார். அவ்வாறு புகுந்ததும் அப்பசுக்களின் ஆநந்த வாழ்வு தொடங்கிற்று.

இறந்தவன் பெயர் மூலன் என்பது. பிழைத்தெழச் செய்தவர் சிவயோகியார். மூலனுடம்பில் புகுந்த அக் காரணத்தால் அன்றுமுதல் திருமூலர் ஆனார்.

பசுக்களைக் காத்தல் : இப்பரகாயப் பிரவேசம் அஷ்டமா சித்திகளில் ஒன்று, உயிர் வேறு உடல் வேறு என்று அறியாதவர்கள், இந்நிகழ்ச்சிகொண்டு, உயிர் இயங்குவது, உடம்பு இயங்காதது, இரண்டும் வெவ்வேறு என்று அறியலாம். திருமூலர், பசுக்களுக்குத் தம்மை ஆயனாகக்காட்டியதுமன்றி அப்பசுக்களையும் மேய்த்தார். அந்தப் பசுக்களைப்போலச் சைவரும் பிறருமாகிய பல பசுக்களையும் திருமந்திரக் கோல்கொண்டு இன்றும் மேய்க்கின்றார்.

மாலைநேரம் உற்றது, பசுக்கள் தாமே தம் கன்றுகளை நினைந்து. விரைந்து, தம் சாத்தனூரையடைந்தன. தம்தம் வீட்டில் புகுந்தன. திருமூலரும் அவற்றின் பின்னேசென்று எவ்வீட்டிலும் புகாமல்

அருளொழுக்கம் : நின்றார், காலந்தாழ்க்கவே, மூலன் மனைவி அவரைத் தேடிக் கண்டாள். காலந்தாழ்த்ததாலும் தோற்றத்தில் வேறுபட்டு வறிதே நின்றதாலும் ஏதோ இவர்க்கு இடருற்றதாக எண்ணி அவரைத்தொடலானாள். தொட மூலன் இசைவான். திருமூலர் இசைவாரோ? அசைவாரானார். அதைப்பொறாத அவள் மயங்கினாள். சுற்றமும் மக்களும் இல்லாத அவள் துணைவனைக்கைவிட அஞ்சுவது இயல்புதானே! கணவனைத் தொட மனைவிக்கு உரிமை உண்டு. அதனால், ஏன் உரிமையைத் தடுக்கின்றீர் என்று வினவினாள். எனக்கும் உனக்கும் ஸ்நானப் ப்ராப்தியும் இல்லை என்று மறுத்துச் சொல்லி, அவ்வூர்ப் பொதுமடத்திற் புகுந்தார், அவள் அன்றிரவெல்லாம் தூக்கமின்றிவருந்திக் கிடந்தாள். மறுநாள். பலரிடம் அவர் பித்துக்கொண்டிருப்பதாகச் சொல்லினாள். அதுகேட்டவருள், நல்லோர் சிலர், "அவர்க்குப் பித்தும் இல்லை. மயக்கமும் இல்லை. சித்த விகற்பங்கள் நீங்கிச் சிவயோகத்தில் நிலைத்த கருத்துடைய அவர் பெருமையை யாராலும் அளவிட முடியாது. அவர் வீடுபெற்ற வித்தகர்.

முற்றும் உணர்ந்த நற்றவர். ஆயர் தன்மைக்கு அவரை ஆளாக்க முடியாது" என்று தெருட்டினர். தெருட்டியும் அவள் மயக்கம் அகன்றபாடில்லை.

சிவயோகத்தமர்தல்: திருமூலர், முன்னுள் பசுக்கூட்டம் வந்தவழியே சென்று தாம் வைத்த காவலான இடத்தில் உடம்பைத் தேடினுர். கண்டிலர். அதன் காரணத்தைத் தம் ஞானதிருஷ்டியினுல் நோக்கினுர். சிவ பெருமான், தாம் அருளிய சிவாகமப் பொருளைத் தமிழிற் பாடிஉதவும் பொருட்டே அவ்வுடம்பை மறைத்த உணமை யைத் தெளிந்தார். மீண்டும் சிவபாத சிந்தையராய்த் திருவாவடுதுறையைச் சேர்ந்தார். 'அரும்பொருளை' உற்று வணங்கினுர். திருக்கோயிலின் உட்பால் மேற்கே ஓங்கிய அரசின்கீழ் அமர்ந்து சிவயோகம் புரிந்து அகத்தாமரையுள் வீற்றிருக்கும் பொருளொடும் இரண்டறக் கலந்திருந்தார்.

தமிழர் தவப்பயன்: ஒவ்வோராண்டிற் கொருமுறை விழித்தெழுந்து, 'ஒன்றவன்' என்று தொடங்கும் திருப்பாடல் முதலிய மூவாயிரம் கொண்ட **திருமந்திர மாலையைக்** கோமுத்திநாதர்க்குச் சாத்தினுர். அம் மாலையில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை மலர்களும் நிறைந்திருந்தன. பன்றிக் கொம்பும் தலைமாலையும் பிறையும் அணிந்த பரம்பொருளுக்கு ஆகமப் பொருள் மாலை ஆனந்தம் பெருக்கிற்று. அதனுல், திருமூலரைத் திருக்கயிலைக்கே மீண்டும் அழைத்துக் கொண்டார். தமிழர் செய்த தவத்தின் பயனே இம் மந்திரமாலை யாகும்.

பத்தாந்திருமுறை: அத்தகு சிறப்புடைய திருமூலதேவ நாயனுர் அருளிய திருமந்திரமாலை, சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பத்தாவதாகத் திகழ்கின்றது. சிவஞான போதத்தின் 10-வது சூத்திரப்பொருள் சிவயோகம்; அச்சிவயோகத்தில் நின்றவர் திருமூலர். அவர் அருளிய அம்மந்திர மாலையும் அச் சிவயோகத்தையும் அதன்

பயனாகிய பாசநீக்கத்தையும் சிவ போகத்தையும் தெள்ளத் தெளிய விரித்து உணர்த்துகின்றது.

சைவத் திருமுறைகளுள் பத்தும் பன்னிரண்டும் அல்லாத எல்லாம் தோத்திரங்கள். பெரியபுராணம் சிவனடியார் வரலாறு கூறுமுகத்தால் சிவபக்தியையும் அடியார் பக்தியையும் விளைவிக்கும் உயர்வுடைய உண்மைநூல். திருமந்திரமாலையோ தமிழிலுள்ள தனிப்பெருஞ்சிவாகமம் ஆகும்.

திருமந்திரமாலை: திருமூலர், சேக்கிழார் பெருமான், தாயுமானவர் முதலியோர் இதைத் திருமந்திர மாலை என்று குறித்தாலும், 'திருமந்திரம்' என்பதே வழக்கத்தில் இருக்கின்றது. இவ்வழக்கத்திற்கு அகச்சான்றுண்டு. இத்திருமுறையில் மந்திரங்களும் அவற்றின் பிரயோகங்களும் பிரயோசனங்களும் கூறப்பட்டிருப்பது அப்பெயர்க்குக் காரணம் ஆகும்.

'மந்திரம் - நினைக்கப்படுவது, நினைப்பது, உபசரிக்கப்படுவது, உபசரிப்பது. மங்-மதித்தல், திர-விகுதி. மந்திரங்களாவன, கடவுளை நோக்கி அழைத்தல், புகழுதல், வேண்டல் முதலிய செயல்களைத் தனித்தனியே உடையன. ஞானக்கிரியைகளை நினைவிப்பன. பக்தி, சுத்தி, சித்திகளைக் கொடுப்பன.

"ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந்திரமாலை"
(பெரியபுராணம் 26)

"மந்தரமாலிகை சொல்லும் இயமநியமாதியாம் மார்க்கத்தில்
நின்றுகொண்டு" (தா்யு—தேசோமயானந்தம், 1)

"மறப்பிலர் நெஞ்சினுள் மந்திரமாலை
உறைப்பொடுங் கூடிநின் றோதலுமாமே'
(திருமந்திரமாலைப் பாயிரம் 86)

இத்திருமந்திர மாலையின் சிறப்பு யாராலும் அளவிட்டு உரைக்கப்படாதது.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியுங்—கோவைத்
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்"

என்று உணர்த்தி நின்றாலும்.

"திருமந் திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந் திரமே சிவமாம்—அருமந்த
புந்திக்கு ளேநினைந்து போற்றும்அடி யார்தமக்குச்
சந்திக்கும் தற்பரமே தான்"

என்ற பழம்பாடலால், இத்தமிழாகமத்தின் தனிப்பெருமை ஓங்கி விளங்குகின்றது இதன் இரண்டாவதடியால்

"ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான்'

என்ற உண்மையை உணரலாம். இது, சரியை முதலிய நால்வகைத் திருவருளையும் ஆன்மாக்களுக்கு அருள்வதாலும், திருவாவடுதுறையில் தோன்றியதாலும், பஞ்சாக்ஷரத்தை விரித்துணர்த்திப் பஞ்சாக்கர தேசிகர் விளங்கும் நினைப்பினை ஊட்டுவதாலும், இங்குத் திருமந்திர மாநாடு நிகழ்வது மிக்க பொருத்தமாகும். அதற்கு ஏற்ப இம்மாலையிலிருந்து,

"ஒன்று கண்டேன் இவ் உலகுக் கொருகனி
நன்று கண்டாய் அது **நமச்சிவாயக்கனி**
மென்று கண்டால் அது மெத்தென் றிருக்கும்
தின்று கண்டால் அது தித்திக்கும் தானே" (2962)

என்னுந் திருமலரை எடுத்துக் காட்டுதற்கு விருப்புண்டாயிற்று. இதை நாடோறும் காலையில் பாராயணம்புரிந்தால் சிவமாந்தன்மைப் பெருவாழ்வை எய்தலாம். *(99)* திரு—சிவம், 'சிவமே பெருந்திரு' 'திருவாளன் திரு நீறு'

இது தமிழ்ப் பாடலால் மூவாயிரம்; மந்திரத்தால் மூந்நூறு; உபதேசத்தால் முப்பது என்னும் மேன்மை யுடையது. சிவனருளையே அன்றி, சிவத்தின் வேறல்லாத குருவருளையும் முதல் இடை கடை மூன்றிடத்தும் அளிக்கும் உயரிய ஞானசாகரமாய்ப் பொலிகின்றது.

மாலையின் மணம் :

இத்திருமந்திரமாலை ஒன்பது தந்திரங்களாகப் பகுக்கப் பட்டிருக்கின்றது. ஒவ்வொரு தந்திரமும் ஒவ்வொரு சித் தாந்தமாய், முடிவில் எல்லாம் சைவசித்தாந்தம் என்று அடங்குகின்றன. தந்திரம் என்பது ஈண்டுச் சித்தாந்தம் என்ற பொருள் பயப்பது. ஒன்பது ஆகமங்கள் ஒன்பது தந்திரங்களாக உணர்த்தப்பட்டன என்பாருமுளர். அதற்கு 'நவ ஆகமங்கள் நந்தி பெற்றனே' (62) என்பதைக்காட்டி நவம் என்பதற்கு, காரணம் காமிகம் முதலிய ஒன்பது (63) என்றும் நிலைநாட்டுவார். வடமொழி யிலுள்ள ஒன்பது ஆகமங்களினும் இத்தமிழ்த் திருமந்திரத் தைப் பிரித்துணர வேண்டி, 'தமிழ் மூவாயிரம்' என்ற தாகவும் கூறுவர். அதன் பொருத்தத்தை 1429 ஆவது பாடலை நோக்கி ஆராய்தல் நன்று. ஒவ்வொரு தந்திரமும் ஒவ்வொரு கடல்போல விளங்குகின்றது. அவற்றுள் எண் ணுதற்கு அரிய ஞான மணிகள் இலங்குகின்றன. அதனால், திருமந்திரத்தை ஞானரத்நாகரம் என்று கொள்ளலாம். முதலாவது தந்திரம் தொடங்குமுன் பாயிரம் என்ற தலைப் பில் நூறு பாடல்களுக்குமேல் இருக்கின்றன.

தந்திரங்கள் :

பாயிரம்

சிவனோடு ஒக்குந் தெய்வம் தேடினும் இல்லை. அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை. அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை. அவனன்றி மூவரால் ஆவ தொன்றில்லை. அம் முதல்வனே திருமூலருக்கு நந்திகுருவாக எழுந்தருளினார். இரவும் பகலும் உடன் நின்று அருள்செய்து வரும் கடவுளை உண்டென்று வழிபட்டுய்தல்

கடவுள் :

வேண்டும். இல்லை என்று பேசுதல் கூடாது. கடவுள் திருவருள் நமக்கே உண்டு என்று உறுதிகொண்டு வணங்குவோரது உள்ளத்தில் அக்கடவுள் நிலைத்து நலம்புரிகின்றார். கடவுளை மனம், வாக்கு, காயம் மூன்றாலும் வழிபடல் வேண்டும். 'எப்பரிசாயினும் ஏத்தினால் ஈசன் அருள் பெறலாம்' 'நினைப்பவர் மனம் கோயிலாக் கொள்வான் (41) சிவனை நினையாதவர்க்கு இன்பம் இல்லை. (47)

வேதத்தை விட்டால் உலகியலொழுக்கம் ஒழியும். (51) வேதத்தில் சொல்லாத அறங்கள் வேறு எதிலும் இல்லை.

வேதாகமச்சிறப்பு : ஞானிகள் வேத பாராயணத்தால்தான் வீடு பெற்றார்கள். வேதப் பொருளை உணர்த்துவன ஆறங்கங்கள். வேதாந்த நெறியே திருநெறி. குருநெறி, சிவநெறி, சிவாத்துவிதம் அடையச் செய்யும் தனிப்பெரு நெறி. சிவனருளிய ஆகமம் இருபத்தெட்டு. அவை சிவாகமம் எனப்படும். இருபத்தெட்டுக்கோடி லட்சம் என்ற பெருக்கத்தையுடைய **தேவாகமங்களில்** சிவபரத்வத்தை விண்ணவர் விளக்கினர் (58). சிவாகமங்களின் பொருள் தேவர்க்கும் விளங்துவதரிது. சிவாகமக் கருத்துக்களை உணராவிடின் அவை எல்லாம் நீர்மேல் எழுத்துப் போல்வனவே.(60, 64) வடமொழி, தென்மொழி இரண்டிலுமுள்ள வேதாகமங்களைப் போற்றும் வழக்கமே உலகப் பஞ்சத்தை ஒழிக்கும் (65) உடம்புக்கும் உயிர்க்கும் உள்ள கட்டு (பந்தம்) வீடு (முத்தி) முதலிய எல்லாம் அவற்றைக் கற்றாலன்றி விளங்கமாட்டா. அவையே கடவுளைக் காட்ட வல்லன. தந்தையைக் காட்டும் தாய்போல்வன.

திருக்கயிலாய பரம்பரை, நந்தி குருவழியாக உலகிற்கு வந்தது. அந்நந்தி அருளைப்பெற்ற நந்திகள் நால்வர் ஆவார்.

குரு பாரம்பரியம் : 1, சிவயோகமாமுனிவர், 2. பதஞ்சலி முனிவர், 3. வியாக்ரபாத முனிவர், 4. இத்திருமந்திரமாலை நூலாசிரியர், (67) நால்வரும் நந்தி குருவினருளால் தங்கள் சிஷ்யபரம்பரைக்குக் குருநாதர் என்னும் பெருமை உண்டாயிற்று. நாதன் - குரு அந்த

நந்திகுரு மார்க்கத்தை உணர்த்துவதற்காகவே இதன் ஆசிரியர் உலகில் வாழ்ந்தார் (68). திருமூலருக்கு எண்மர் சீடர்கள். 1. மாலாங்கன், 2. இந்திரன், 3. சோமன், 4. பிரமன், 5. உருத்திரன், 6. கந்துரு, 7. காலாங்கி, 8. கஞ்சமலையன் (69) என்பவர்கள் அவர்கள். அவருள் நால்வர், திசைக்கொருவராய்ச்சென்று, ஆசிரியராகி உபதேசித்தனர். இவ்விருவகையோர்க்கும் வேறுபாடுண்டு (71).

திருமூலரும், அகச்சான்றுகளும் :

திருமூலர், குருவையும் சிவபிரானையும் தொழுது வணங்கித் தமிழாகமம் செய்தார். குருவருளால் ஞான சபையில் தனிக்கூத்தைத் தரிசித்துக் கொண்டு ஏழுகோடி யுகம் இருந்தார். இருந்த காரணத்தை, இந்திரனுகிய சீடனுக்குச் சொன்னுர். புவனும்பிகையாகிய சத்தியை உபாசித்து வந்தார், மாலாங்க சீடனுக்கு உரைத்ததில் வேதத்தைத் தமிழிற் பாடியருளவே பூமியில் வந்து திருவாவடுதுறையில், திருக்கோயிலில், அரசின் நிழலில் சிவநாம பாராயணத்துடன் வாழ்ந்தேன் என்ருர், (77-9) தமிழ்ச் சிவாகமம் செய்தற் பொருட்டே சிவபெருமான் திருமூலரை நன்ருகப் படைத்தான் (81) ஒன்பதுகோடியுகம் சிவபிரானை ஞானப்பாவால் அபிடேகம் புரிந்து போற்றித் திருவரசின் நிழலில் வீற்றிருந்தார் (82). பூமிக்கு வந்த வழியும் (83) அத்தன் அருளிய வேதோபதேசமும் (84) கூறினுர். திருமூலர் அடைந்த மெய்யின்பத்தை இந்த உலகத்தார் எல்லாரும் அடைய வேண்டும் என்று பெருங்கருணைகொண்டே (இத்தமிழ் ஆகமமாகிய) திருமந்திரமாலையை அருளினுர்.

'நான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' (85)

இதிலுள்ள மந்திரத்தை உணர்ந்து வரவரச் சிவாகமப் பொருளெலாம் இனிது விளங்கும் (85). இம் **மந்திர மாலையை** மறவாது உறைப்போடு ஓதி வரவேண்டும் இது தமிழ்ச் சாத்திரம். அமரர்க்கும் கிட்டாத திருவடியை என் தலைமேல் வைத்தருளிய நந்திகுருவினருளால், வாக்கு

மனோதீத சிவாநுபவ நிலையை விளக்கியிட்டேன் என்றும், திருக்கயிலாய பரம்பரையில் வந்தேன் என்றும் (92), குருவருளே சிவமூலத்தை அறிந்தும், சதாசிவனாகியும் மெய்ஞ் ஞானத்துள் ஒடுங்கியும் இருக்கும் பேரின்ப வாழ்வை அளித்தது என்றும் (93) உரைத்தார். சிவமாம் பெருஞ் சுடர்க்கு உள்ள அடி முடி அகலம் நீளம் யாதும் அறியாமல் சிவாகமம் பாடலுற்றேன் என்று, அடக்கமும் அறிவித்துள்ளார். திருமந்திரமாலைப் பாராயணம் சிவாநந்தத்தை எய்துவிக்கும் முத்தி முடிவை இம்மூவாயிரம் தமிழ்ப் பாடல்களிற் பொதுவும் சிறப்புமாக உணர்த்தியிருக்கின்றார்.

ஏழு மடங்கள் : காலாங்கர், அகோரர், மாளிகைத்தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகதேவர், நிராமயதேவர் எழுவரும் குருவாய் இருந்த மடங்கள் ஏழும் சன்மார்க்கத்தை வளர்த்து வந்தன. அவர்க்கு முந்தியவராகிய திருமூலரே இத்திருமந்திரமாலை என்னும் சிவாகமத்தை அருளினார்.

'அயனெடுமால் நமக்கு அந்நியம் இல்லை' (107)

'யாதொருதெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருகுவர்' சித்தியார். (109)

'ஆதர்கள்....ஈசன் நெடுமால் அயன்என்று
பேதித்தவரைப் பிதற்றுகின் றார்களே' (110)

முதல் தந்திரம் : உயிர்க்கு உயிராகிய பரமசிவன், உள்ளிருந்து உருக்கி, ஒப்பில்லா ஆனந்தக்கண்ணைக் காட்டி, மும்மலத்தையும் ஒழிப்பான். அப்பரமபதியும் பசுக்களும் பாசங்களும் அநாதிநித்தியம். குரு சந்நிதியில் மலம் ஒழிவது, சூரியகாந்தத்தின் சந்நிதியில் பஞ்சு தீய்வதுபோலும். சூரியன் - சிவன். சூரியகாந்தம் - நந்திகுரு. பஞ்சு - மும்மலம். குருவருளால்பெறும் நலங்கள் கணக்கில்லாதன. சிவயோகியர் செத்தாரைப்போலத் திரிந்திருப்பர். சிவசித்தர் வெளியுள் வெளிவிரவுதல் முதலியவற்றைத் தெளிந்துணர்வர். சிவபோகத்தை இருந்த இடத்திலிருந்து

தெரிசிப்பர். சொல்லும் சொல்லின் முடிவும் தம்முளடக்கியவர். தத்துவாதீத முத்தியைப் பெற்ருேரே பரமுத்தர். வாழ்கின்றபோதே செத்தவர்போலாகித் தம் செயல் இன்றி எல்லாம் சிவன்செயலாகச் சோம்பரைப்போலச் சுகாதீதத்தில் தூங்கும் முத்தர்கள் சிவலோகமும், சிவயோகமும், சிவபோகமும் தம்முள்ளே கண்டிருப்பர். அப்பொடு பெய்த உப்பே போலச் சீவனும் சிவனும் அத்துவிதமாகும். திருவடியே சிவம் முதலிய யாவுமாம். குரு தெரிசனம், குருநாம பாராயணம், குரூபதேசம், குருதியானம் எல்லாம் சிவஞானத் தெளிவை உண்டாக்கும்.

யாக்கை நிலையாது. சுற்றமும் துணையும் சுடுகாடு மட்டே, அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே, உயிர்த்துணை விரதமும் ஞானமும். குடம் உடைந்தால் ஓடென்று காக்கப் படும்; உடல் உடைந்தால் இமைப்போதளவும் வைத்திடார். அகலிருக்க விளக்கெரி கொண்டாற்போல உடலிருக்க உயிரைக் கொள்வான் கூற்றுவன். **இளமை நிலையாது.** சூரியன் தோற்றமும் மறைவும் நாளெனக்காட்டி, உயிரை உடம்பினின்றும் அறுக்கும் வாளாகும். பால குமார விருத்தராகும் விகாரத்தைப் பார்த்தும் விருத்த குமார பாலரான சொக்கநாதரைத்தொழாது மாய்கின்றனரே பலர்? **நிலையாத செல்வம்** அழிவதன்முன்னமே செல்வன் கழலேத்துஞ் செல்வத்தைத் தேடுக. தன்னிழல் தனக்குதவாது. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.

ஐவர்க்கு ஒரு நிலம் போல்வது பஞ்சேந்திரிய தேகம். ஐவரும் அந்நிலத்தைக் காப்பதுபோலப் பஞ்சேந்திரியங்களும் தேகத்தைக்காக்கும். ஐவர்க்கும் தலைவன் ஓர் ஓலை விடுத்தால் அந்நிலங்காவலை விட்டு ஐவரும் ஓடுவதுபோல, தூதுவரை யமன் அனுப்பினுல் இந்திரியங்கள் உடம்பினின்றும் ஓடும்.

'பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகம் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே'

கல்லாத அரசனுக்குத் தருமம் தெரியாது. அக்ரமக் கொலை அதிகம்செய்விப்பான். இயமன் நல்லவரை அணுகான். கொடுங்கோல் வாழும் நாட்டில் அஞ்ஞானம் நிறையும். வருணாச்சிரம தருமங்களைக் காத்தல் செய்வதே வேந்தனுக்கு முக்தி.

'ஆவையும் பாவையும் மற்றற வோரையும்
தேவர்கள் போற்றும் திருவேடத் தாரையும்
காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
மேவும் மறுமைக்கு மீளா நரகமே' (243)

மதுஉண்போரைத் தண்டித்தல் மன்னனின் கடமை (246)

அவரவர் சமய நெறியில் நின்று ஒழுகாத மக்களை அந் நெறியில் ஒழுகச்செய்வது அரசன் கடன். (247)

'ஓமத்துள் அங்கியின் உள்உளன் எம் இறை'

அந்தணர் செந்தழல் ஓம்பி முப்போதும் நியமந்தவறாது ஒழுகுபவர், வேதாந்த ஞானத்தர். ஞானத்தால் சிவனடியைச் சேர்ந்தவர்.

'வேதாந்தமாவது வேட்கை ஒழிந்திடம்'

'நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்'

மறையோர் குருபதேசத்தால் ஞானாகாரமுடையராய்ச் சமாதியில் நிற்பவர்,

அறம் அறியார் அண்ணல்பாதம் நினையுந் திறம் அறியார்'

'ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்'

'யாவர்க்குமாம் இறைவற் கொருபச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக் கொருவாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போ தொருகைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின் னுரைதானே'

ஐம்பெரும் பாதகமும் அகன்றோர், திருவடி சேர்ந்து ஞானானந்தத்திருக்கும் உண்மைநிலையை அடைவர்.

கற்றறிவாளர் கருத்திலோர் கண்ணுண்டு

கற்றோர்க்கு மூன்று விழி

'துணையதுவாய் வரும் தூயநற் கல்வியே', 'பற்றது பற்றின் பரமனைப் பற்றுமின் கற்றவர் பேரின்பம் உற்றுநின்றாரே', 'சிவன் பணி கேட்பவர் தேவருமாவர்', 'உறுதுணையாவது உலகுறு கேள்வி', 'எல்லா இடத்தும் உளன் எங்கள்தம்இறை கல்லா தவர்கள் கலப்பறியாரே', 'கல்லாத மூடரைக் காணவுமாகாது கருத்தறியாரே', 'நடுவு நின்றார்க்கன்றி ஞானமும் இல்லை', 'காமமும் கள்ளுங் கலதிகட்கே ஆகும்', 'கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறியாரே', 'மயக்கும் மதுவுண்ணும் மாமூடர் தேறார்', 'இராப்பகல் அற்ற இடத்தே இருந்து பராக்கற ஆநந்தத் தேறல் பருகார்', 'சத்திசிவம் ஆம்இரண்டும் தன் உள்வைக்கச் சத்தியம் எண்சித்தித் தன்மையு மாமே', 'வறியோர்க்கழகு வறுமையிற் செம்மை', அன்புசிவ மிரண்டென்பர் அறிவிலார் அன்பேசிவ மாவதுஆரும் அறிகிலார். 'பத்திமையாலே பணிந்து அடியார் தொழ முத்திகொடுத்து அவர்முன்பு நின்றனே'.

விசும்பிற்றுளி வீழின் அல்லால் பசும்புல்தலையும் தோன்றாது. மழைஇன்றி மாநிலத்தார்க்கில்லை.

அகத்தியர் நடுவுநிலைசெய்யும் பொருட்டே உலகிற்கு வந்தது. அந்தகாசுரவதம், தக்ஷசங்காரம், அயன்தலைகோடல், அரியைக்கிழித்தல், சலந்தரன்வதம், திரிபுரசங்காரம், கஜாசுர

இரண்டாம் தந்திரம்:

வதம், காலசங்காரம் ஆகிய அஷ்ட வீரஸ்தானம், இமாசல குமாரிதவம், அயன்மாலுக்களித்த நலங்கள், இராவணனுக்கு ஈந்தவரம், சண்டேசுவரர்க்குத்தந்த பதவி, தேவர்களை வாழ்வித்தது, தக்ஷயாகத்தினை அழித்தவகை, பிரளயகாலத்துப் பிரானருள் விளக்கம், திருமால் சக்கிரம் பெற்றது, எலும்பும் கபாலமும் ஏந்தியது, அடிமுடிதேடிய வரலாறும் தாம் அறிந்தவாறும், பஞ்சகிருத்திய விசேஷம், சங்காரசதுஷ்டயம், மறைப்பின் விளக்கம்.

'ஒருவனுமே உலகேழும் படைத்தான்.... அளித்தான்....
துடைத்தான்.... உயிர்.' (404)

'மண்ணொன்று தான்பல நற்கல மாயிடும்,
உண்ணின்ற யோனிகட் கெல்லாம் ஒருவனே
கண்ணொன்று தான்பலகாணும் தனைக் காணு
அண்ணலும் இவ்வண்ணம் ஆகிநின்றானே' (440)

'உச்சியில் ஓங்கி ஒளிதிகழ் நாதத்தை
நச்சியே இன்பங்கொள் வார்க்கு நமனில்லை' (442)

உலகமென்னுங்குடத்திலே நீரிற்பால்போல இறைவன் நிற்கும் நேர்மையை இடைவிடாது காண்பதே பதார்த்தங்களைப் பார்க்காமல் பரமேபார்த்திருக்கும் பரமசுகம். (450)

கருவுற்பத்திவிசேடம், மூவகைஉயிரினம், சிவஞானிக்குத் தானஞ்செய்தல், அதன்மேன்மை, அஞ்ஞானிக்கு ஈந்த அதி பஞ்சபாதகம், அகத்தும் புறத்துமுள்ள தீர்த்த விசேடம், சிவலிங்க ஸ்தாபனம், திருக்கோயில் பரிபாலனம், அர்ச்சகர் அல்லாதவர் அர்ச்சித்த பாவங்கள், ஆறுமுகப்பிரான் தோற்ற மும் காரணமும், சிவம், மாதாபிதா, குரு, பக்தர் ஞானிகள் மாதவர், அடியார் முதலியவர் இடத்தில் அபராதமும் நிந்தை யும்செய்த தீங்குகள், பொறுமையின் நலம், பெரியோருடன் கூடும் பேரின்பமாகிய அடிப்படையான ஞானவுண்மைகள் பலவும் இதில் உணர்த்தப்பட்டன.

அஷ்டாங்கயோகமும், சித்தயோகமும்

யோகத்தின் எட்டுறுப்புக்களின் இயல்புகள், மனமடங்க வாயு அடங்கும் உண்மை, அஷ்டாங்கயோகம் பயில்வார்க்கு அதன் ஒவ்வோருறுப்பிற்கும் உரிய திருவருட்பயன் வேறு

மூன்றும் தந்திரம்: பாடு, அஷ்டமாசித்திகள், பரகாயப்ர வேசம், கலைநிலை, காயசித்தி முறையில் உடலைப் போற்றும் உண்மை, ஆயுட்காலத்தைப்பற்றிய அரும் பேருண்மைகளை உணர்த்தும் சக்கிரம், ஆயுளைக் கணித்து உணரும் உபாயங்கள், வாரந்தோறும் வேறுபடும்

சரநிலையும் பயனும், வாரசூலம், கேசரியோகம், அமுரி தாரணை, சந்திரயோகம் ஆகிய யோகநெறி விளக்கம் இனிது உணர்த்தப்பட்டது. இத்தந்திரத்திற் சொல்லப்பட்ட அத்தனையும் பயின்றவர்க்கே அடுத்த தந்திரத்திற் கூறப்படும் உண்மைகள் அநுபவத்திற்கு எய்தும்.

அஜபாமந்திரயோகம் முதலியவை

நான்காம் தந்திரம் : அஜபாமந்திர யோகம், பஞ்சாக்ஷர மந்திரஜப யோகம், திருவம்பலச் சக்கிரம், கூத்தனைக் காணுங்குறி, பிரணவ மந்திரப் பெருமை, பஞ்சாக்ஷரபேதம், அவற்றின் பயன், பெருமை, சிவசக்ரம் (988), தம்பனம், மோகனம், உச்சாடனம், மாரணம், வசியம் என்பவற்றிற்குரிய வழிகள், அருச்சனையும் அதற்குரிய விதிகளும் பயனும், கன்மம் வேண்டாத மேலான தன்மைகள், திருவைந்தெழுத்துநிற்கும் உறுப்புநிலை, நவகுண்டமும் அதன் உள்ளொளியும் நன்மைகளும், திரிபுரை முதலிய சத்திபேதமும் திரிபுரை சக்ரமும், சோதிவயிரவி சூலம்வந்து ஆளும்வழி, உறக்கத்தில்வந்தருளிய மனோன்மனியின் அற்புதச்செயல், புவனபதியம்மையாகிய பூரணசத்தியின் முழுமை, ஆதாரமும் ஆதேயமுமாகிநிற்கும் சத்தி தத்துவம், அச்சத்தியின் அருளே நான்மறையும் ஆறங்கமும் என்னும் உண்மை, சத்தியுபாசனையில்லாதவர் இழிவு (1199).

> 'அண்டம் முதலாய் அவனிபரி யந்தம்
> கண்டதொன் றில்லைக் கனங்குழை யல்லது' (1210)

என்னும் சத்தியாதி சத்திபர்யந்தம் உண்டாகும் ஞான தரிசனம், பராசத்தியர்ச்சனை, அம்மையப்பர் தோற்றம், ஆசிரியர்க்கெய்திய உண்மை, பிரணவ சகிதமான திருவைந்தெழுத்தடக்கும் ஏரொளிச்சக்கிரமும், வயிரவச்சக்கிரமும், சாம்பவிமண்டலச்சக்கிரமும், பீஜாக்ஷரங்களைக்கொண்ட புவனாபதிசக்கிரம், நவாக்ஷரிசக்கிரம் 'நவாக்கரியாவது நான் அறிவித்தை' (1321) சக்கிரத்தின் இலக்கணம் (1364-6)

பூசிக்கும் முறைமை, நவாக்ஷரிமண்டலம், நவாக்ஷரிசொரூபம், நவாக்ஷரியாகிய சதாசிவநாயகியின் திருவுருவக்காட்சி முதலிய பல உண்மைகள் நான்காவது தந்திரத்துள் விளக்கப்பட்டிருக்கின்றன.

இதுகாறும் சித்தாந்தசாத்திர ஞானத்துக்கு இன்றியமையாத – அடிப்படையான உண்மைகள் முதலிரண்டு தந்திரங்களுள்ளே விளக்கப்பட்டன. யோகமார்க்கத்தில் உள்ள பலவகை நிலைகள் மூன்றும் நான்குமாகிய தந்திரங்களில் விரித்துணர்த்தப்பட்டன.

இதற்குக் காரணம், **ஐந்தாவது தந்திரத்துள்** யோகத்தை உணர்த்துமிடத்தில் விளக்குதற்கு உரிய எல்லாவுண்மைகளையும் முதலில் இரண்டு தந்திரங்களுள் விரித்து உணர்த்தி முடித்தால், ஆண்டுச் சுருக்கிக் கூறிவிட்டுக் கற்போர்க்கு இடையீடு பெரிதாகும் இடர்ப்பாடு நேராது காத்து, எடுத்துக்கொண்ட சரியைமுதலிய நாற்பாதங்களையும் இனிதுணர்த்தலாம் என்பதே ஆகும். சரியையும் கிரியையும் போலன்றி யோகம் மிக்க விரிவுடையது என்பது அறியத்தக்கது

ஐந்தாம் தந்திரம் : நால்வகைச் சைவம் (1) சைவசித்தாந்தர், (2) நடுக்கற்ற காட்சியர், (3) ஞானஞேயத்தார், (4) சரியை, (5) கிரியையினோர், (6) துவாதசமார்க்கர், (7) கடுஞ்சுத்தசைவர். (8) ஞானி ஆகிய எண்மருடைய இலக்கணங்கள், சாதனபேதம், சுத்தசைவரது சாதனம். ஞானி, ஞாஞேதயன், ஞானபூபதி. உண்மை முத்தியோன். சுத்தசைவத்திற்குரிய ஆகமம். சுத்தசைவர் உபாயமும், காட்சியும், ஞானசரிதை, வேதாந்தி பிரமவித்தியாதரன், நாதாந்தி நடுக்கற்றயோகி, சித்தாந்திசைவன் என்னும் பேதம், சித்தாந்தமுத்தி, சித்தாந்தமார்க்கத்தின் இலக்கணம், சுத்தசைவர், சுத்தசிவமாதல், யான் தானெனுஞ்சொல் இரண்டும் இயம்பாதிருத்தல், தத்துவ சிந்தனையின் பயன்.

சரியையே சைவத்தின் உயிர். ஞானபூசை – யோக பூசை, புறப்பூசை என்பவற்றின் இலக்கணபேதமும் தார தம்மியமும். சரியையாளர் முதலிய நால்வகையோர்க்கு முள்ள நிலைவேறுபாடும் பயன்வேறுபாடும், கிரியாபூசை, யோகபூசை, ஞானபூசை. ஞேயபூசை நான்கின்பேதம், சரியை முதலியவற்றை நந்திகுரு அருளிய நலம். சமயதீக்ஷை முத லியவற்றின் பேதமும் அவற்றின் பயனாகிய சுத்திபேதமும் (1450, 1466, 1476) கிரியையின் இயல்பும் பெருமையும் பயனும்,

> "பத்தன் கிரியை சரியை பயில்வுற்றுச்
> சுத்த அருளால் துரிசற்ற யோகத்தால்
> உய்த்த நெறியுற்று உணர்கின்ற ஞானத்தால்
> சித்தம் குருவருளாற் சிவமாகுமே." (1455)

தறியிருந்தாற்போல் தர்மை இருத்திச் செய்யும் 'யோகத் தின் இயல்பும், ஞானத்தின் இயல்பும் ஏற்றமும் ஞானியர் சிறப்பும் நான்குகுணமும், சுத்தன், சிவமுத்தன், சித்தன் என்னும் ஞானியர் பேதமும், சன்மார்க்கம்முதலிய நால்வகை மார்க்கமும் அவற்றின் நால்வகை முத்தியும், நால்வகைப் படும் சத்திநி பாதமும்; புறச்சமய தூடணமும், சமயாசாரமில் லாமையினிழிவும், அகச்சமயம் ஆறும் ஓதும் நெறியும் ஆகிய உண்மையெல்லாம் இதில் விளங்குரைக்கப்பட்டன.

உள்ளத்தைவிட்டு ஓரடியும் நீங்காத இறைவனே சற் குருவாய் வந்து அருள்கின்றான். அதனால் சற்குரு வேறு

ஆறும் தந்திரம் : பரமசிவம் வேறு அல்ல. சற்குருகடாக்ஷத் தால் அஷ்டமாசித்தி முதலிய எல்லா நலங் களும் எளிதில் எய்தும். தேவன், குரு, குருபரன் என்று மூவகையர். குருவைத் தரிசித்த புண்ணியர்க்குக் 'குருவே சிவம்' என்னும் உண்மை விளங்கும். பாவியர்க்கு மனித ராகவே தோன்றும். குருவருள் ஒன்றே மெய்ப்பொருள் உண்மைகளை உணர்த்தும். சிவஞானியைச் சிவனெனவே தேறி வழிபடல்வேண்டும். அவ்வழிபாடு பேரின்பவீடுதரும்.

" குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவம் என்பது குறித்து ஓரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரைஉணர்வு அற்றதோர் கோவே " (1581)

குருவருளால் சித்தம் சிவமாகும். செய்தவை எல்லாம் தவமாகும். சிவபிரான் குருவாய் வந்து அருளாவிட்டால் சித்திமுத்தி முதலிய யாவும் யார்க்கும் விளங்க வழியில்லை. பத்தியும் ஞானமும் வைராக்கியமும் பரசித்திக்கு வித்தாகும். சிவோகம்பாவனையைத்தரும். வீட்டுணர்வைத்தரும் திருவருளை எளிதில் எய்தலாம். துன்பப்பிறப்பு நீங்கிப் பேரின்பம் பெற அருள்கின்ற **குருவை இடைவிடாது தியானிக்க வேண்டும்.** சிவஞானத்தெளிவே சித்தியும் முத்தியும் சிவபரச்சேர்வும் சிவாநந்தமும் கொடுக்கும்,

திருவடிப்பேற்றின் அருமையும் பெருமையும், திருவடி ஞானத்தின் பூரணபலனும் திரிபுடிஞானத்தின் இயல்பும், ஞானிக்கும் மோனிக்கும் உள்ளதாரதம்மியமும் அறியத் தக்கன.

துறவும் தவமும் விரித்துணர்த்தப்பட்டன. உடம்பு வாடிவற்றத் தவம்செய்தல் வேண்டும். சிவமாதலே தவப்பேறு. திருவருளால்தான் ஞானம் வரும். அவவேடத்தியல்பு அறிந்து நீங்கித், தவவேடத்தியல்பு உணர்ந்து மேற்கொள்ள வேண்டும். திருநீற்றின் பெருமையை அறிந்து மெய்யார அணிதல்வேண்டும்.

" கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே ஆமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே. "

ஞானவேடத்துக்கும் சிவவேடத்துக்கும் தாரதம்மியம் உண்டு. ஞானவேடத்துக்குச் செயல் உண்டு. சிவவேடம் செயலற்றநிலை. குருபதேசம் முதலியவற்றிற்கு அபக்குவர் + பக்குவர் இயல்புகள் எல்லாம் இதில் அறியத்தக்கன.

ஆருதாரம், சிவலிங்க பேதம், சம்பிரதாயம், அருளியல்பு, சிவபூஜைகளின் சிறப்பு, அடியார்பெருமை, போஜன

ஏழாம் தந்திரம்: விதி, பிக்ஷாவிதி, முத்திரைகளின் பேதம், சமாதிக்குரிய குகை. கிரியை. விந்துற்பனம், விந்துஜயம், (போகசரவோட்டம்), ஆதித்தநிலை (ஆதித்த பேதம்) பசு லட்சணம், பசுபேதம், போதன் என்ற ஆன்மநிலை, பஞ்சேந்திரிய ஆன்ம லட்சணம், சற்குரு அசற்குரு நெறி வேறுபாடு, தீயொழுக்கம், கேடுகண்டிரங்குதல், இதோபதேசம் ஆகிய சைவத்தின் நாற்பாத மெய்ம்மைகளையெல்லாம் இத்தந்திரத்தில் காணலாம்.

கேவலம் சகலம் சுத்தம் என்னும் அவத்தைகளின்

எட்டாம் தந்திரம்: நிலையும் அவற்றின் பேதங்களும் அரும் பேருண்மை நுட்பங்களும், மகாவாக்கியப் பொருள்களும் பிறவும் இதில் விளக்கப்பட்டுள்ளன.

குருமடமும். ஞானகுருதரிசனமும், பிரணவ சமாதியும், அச்சமாதியிற் காணும் ஒளிநெறியும், அதன் பேதங்களும்,

ஒன்பதாம் தந்திரம்: பஞ்சாக்கர பேதங்களும், திருக்கூத்துக்களும். ஞானசாரப்பேறும், ஞானோதயமும் ஞானனந்தமும். சொரூபோதயமும், சிவதரிசனமும், சிவசொரூப தரிசனமும், முத்திபேதமும் விளக்குவதோடு மறைபொருள்களாக வைத்துணர்த்தும் சூனிய ச்ம்பாஷணையை இனிது உணர்த்தும் இதுவே இதன் முடிவான பகுதியாம். இவற்றையெல்லாம் உபதேச மரபில் உணர்தல்வேண்டும்.

இத்தகைய அரும்பெருந் தமிழாகமக்கடலே நமது பத்தாந் திருமுறையாகிய திருமந்திரமாலை. இத்திருவருள் நூற்பொருளைக் கற்றுணர்ந்து பேரின்பவாழ்வுறத் தங்களைத் தகுதியுடையவராக்கிக் கொள்வது பகுத்தறிவுடைய மக்கள் கடனாகும்.

ஆதலின், இத்திருமந்திரப் பெருமை உலகிற் பரவும் பொருட்டு, திருவாவடுதுறையில் இன்று (31—1—54) முதல் மூன்று நாட்கள் திருமந்திரமாநாடு நிகழ இருக்கின்றது.

திருமந்திர மாநாடு :

திருவாவடுதுறையிலுள்ள மடாலயம் தொன்மையுடையது. திருக்கயிலாய பரம்பரையில் நந்தி மரபில் மெய்கண்ட சந்தானத்தில் நான்காவது குருமூர்த்திகளாகிய உமாபதி சிவாசாரியாரது அருளுபதேசம்பெற்றவர் அருணமச்சிவாயர். அவர் அருண்மாணுக்கர் சித்தர் சிவப்பிரகாசர். அவரிடம் திருவருண் ஞானம்பெற்ற **ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகளே துறைசை மடத்தின் முதல்வர்.** இப்பெருமானை **முத்தி பஞ்சாக்கர தேசிகர்** என்று தொழுவது தொன்று தொட்டுள்ள மரபாகும். அந்தக் குருமூர்த்திகளின் மரபில் **இருபத்தொன்ருவது சந்நிதானமாக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களே இத்திருமந்திரக்கருத்து,** உலகெலாம் பரவச் செய்யும் அருள் நினைவுகொண்டு, இம்மாநாட்டை நிகழ்த்துகின்ருர்கள்.

பன்னிரு திருமுறைகளுள் ஒன்பதாந் திருமுறையும் ஒன்பது தந்திரங்களுடைய திருமந்திரமும் திருவாவடுதுறை மடாலயச் சார்புடையன. அவற்றின் அருளாசிரியர் பலருள் திருமாளிகைத் தேவரும் திருமூல தேவரும் இங்குத் திருக்கோயில்கள் கொண்டருள்கின்ற சிறப்புமுண்டு; எட்டாந் திருமுறை முதலிய ஐந்தும் சிவஞானபோதத்தின் பின் ஐந்து சூத்திரப் பொருள்களோடு பொருத்திக் காட்டுவர் பெரியோர். திருவாசகத்திலும், திருக்கோவையிலும் நமச்சிவாயப் பொருளே முற்றிலும் உணர்த்தப்பட்டது. அப்பஞ்சாக்கரப் பொருளே இம்முத்திபஞ்சாக்கர தேசிகராகிய பரமாசாரியார். இது சிவதீக்ஷையாகிய குருவருளைக் குறிக்கும். பஞ்சாக்கர ஜபமும் அகவழிபாடும் ஒன்பதாஞ் சூத்திரத்தில் உணர்த்தப் படுவன. அவற்றை ஒன்பதாந் திருமுறையில் அநுபவ

துறைசை மடத்தின் பெருமை:

வாக்கில் அறியலாம். அவற்றை அருளியவருள் ஒருவராகிய திருமாளிகைத் தேவர் திருக்கோயில், அக்குருமூர்த்தியாலயத்தின் வடவருகில் திகழ்கின்றது. அது சிவதீக்ஷையின் பயன் என்று உணர நிற்கின்றது. திருமூலர் திருமந்திரம் சிவயோக ஞானக் களஞ்சியமாயிருக்கிறது. பத்தாஞ் சூத்திரப் பொருளைக் குறிப்பது. பதினொன்றுந்திருமுறை சிவாநந்தப்பேற்றை உணர்த்தும் பதினொன்றுஞ் சூத்திரப் பொருளைக் குறிப்பது. ஜீவன் முக்திநிலைக்கு உரிய சிவவேடம், சிவாலய வழிபாடு, சிவஞானியரிணக்கம் மூன்றையும் உணர்த்தும் பன்னிரண்டாஞ் சூத்திரத்தின் விரிவே பெரியபுராணம். இத்தகைய் சைவத்தின் அருள் நூல்களிற் கூறப்படும் சிவானந்தாமிர்தத்தையே திருவாவடுதுறை மடாலயம் பக்குவ சீலர்களுக்கு வழங்கிக்கொண்டு வரும் உயர்வுடையது. சிவபக்தியும், குரு பக்தியும், அடியார் பக்தியும், அருள்நூற் பொருள்களிற் பற்றும் உடைய சைவர், துறைசைமடத்துள் ஆசாரத்துடன் சென்று, குருமூர்த்திகளை மெய்யன்புடன் வழிபட்டு நின்றால், இன்றும் திருவருளை நன்று எய்தலாம். இதை அநுபவித்து உணர்தல்வேண்டும். திருவருள் விலாசம் இக்குருவருட் சந்நிதிகளில் உண்டு. இஃது அழியாவுண்மை.

இத்திருவாவடுதுறை மடத்திலுள்ள அத்திருவருள் விலாசமே குருநாதர் பலரையும், மாதவச் சிவஞானயோகிகள், தாண்டவராய சுவாமிகள் முதலிய முனிவர் பலரையும், வித்துவான்கள் பலரையும் தோற்றிப் போற்றிச் சைவ உலகிற்குப் பயன்படச் செய்தது. நூறாயிரம் பாக்களுக்கு மேலும் பாடிப் பெரும் புகழ் பெற்று **மகாவித்துவான்** என்னும் தனிப்பட்டத்தோடு வாழ்ந்த மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களை இந்த ஆதீனமன்றோ உலகிற்கு உதவியது? அப்புலவர்க்கும் அவர் மாணாக்கர் பலர்க்கும் திருவருளோடு கலந்த நல்லுணவும் பொன்னுடையும் மற்றும் வேண்டும் நலம் பலவும் நல்கி ஆதரித்த சீர்த்தி இத்துறைசை மடத்திற்கே உரியது. தமிழ்க்கிழவர், உ. வே. சுவாமிநாதையர்க்குந் தாயகமாய் இலங்கியது.

தாயகம் :

இத் திருமடத்திலிருந்துதான், பண்டும், சிவஞான போதத்திற்குச் சிற்றுரைகளும் திராவிட மாபாடியமும்

நூல்வெளியீடு : சிவஞான சித்தியார்க்குப் பொழிப்புரையும் பிற மெய்கண்ட நூல்களின் உரை பலவும் வெளிவந்தன. சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் இலக்கணக் கொத்துரை என்னும் நுண்மாண் நுழைபுலத்தை விளைவிக்கும் அரிய நூலும் இம்மடத்தின் திருவருளுருவே யாகும். இந்த ஆதீனத்தின் பண்டார சாத்திரங்கள் ஒப்புயர் வில்லாத சிவஞானக் கருவூலங்கள். எங்கள் தருமைக் குருநாதர் அருளிய சிவபோகசாரம்போல, அவையும் அக் காலத்தில் பிரசித்தி பெற்றிருந்தன. அப்போது கற்பார் பலர் இருந்தனர். இன்றும், இம்மகாசந்நிதானம் அவர்கள் நூற்றுக்கணக்கான நூல்களுக்குமேல் ஆதீன இலவச வெளியீடுகளைச் சைவ உலகிற்கு வழங்கி யிருக்கின்றார்கள். இச்சைவத் தமிழ்த் தொண்டுக்கு உலகம் நன்றிமறவாக் கடப்பாடு உடையது.

இப்பொழுது நடக்கும் மாநாடு ஒன்றுதானே! இவர்கள் பீடத்திற்குவந்த சில ஆண்டிற்குள் பல மாநாடுகள் நிகழ்த்தப்

மாநாடுகள் : பெற்றன. திருவெண்ணெய்நல்லூரில், ஆண்டு தோறும் மெய்கண்டான் மாநாடு மிக்க சிறப்பொடும் நிகழ்த்தப்படுகின்றது. அங்கே ஆதீனத்திற்குரிய ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனர் திருக்கோயில் பரிபாலனம், பூஜை முதலியவை முன்னிலும் பெருஞ்சிறப்பில் நடந்துவரும் உண்மை உலகம் அறிந்ததே. மெய்கண்ட நூல்களையும் வரிசையாக உரையுடன் இலவசவெளியீடுகளாக இப்பொழுது வழங்கி வரும் வாய்ப்பு, சைவர்க்கு எய்தியிருப்பது யாவராலும் சிறப்புறப் பாராட்டத் தக்கது. இவ்வளவு பெருமைகளும் இந்த மகாசந்நிதானம் அவர்கட்கே உரியன ஆகும்.

இம்மாநாடு, இந்துமத பரிபாலன அமைச்சர் கனம், கே. வேங்கடசாமி நாயுடுகாரு அவர்கள், B. A., B. L.,

அவைத்தலைவர்கள் : சென்னைப்பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் சொல்லின் செல்வர் திரு. R. P. சேதுப்பிள்ளை அவர்கள் B. A., B. L., பழநி சைவ

சித்தாந்த சரபம் காசிவாசி சிவஸ்ரீ ஈசானசிவாசாரியார் அவர்கள் ஆகிய மூவர் தலைமையில் அன்பர் பலர் சொற் பொழிவுகளுடன் நடத்த ஏற்பாடுசெய்யப்பட்டிருப்பது மிகப் பாராட்டத்தக்கது.

இம்மாநாடு, நன்கு நிறைவுற்றுச் சிறந்து விளங்குக. இத்திருமந்திரம் தூயநிலையில் நன்மக்கட்குப் பயன்படுக.

வாழ்த்துரை : சைவத் திருமுறைகளும் சைவ சித்தாந்த சாத்திரங்களும் உலகிற் பரவித் திருவருள் வாழ்க்கை ஓங்கி வளர்தற்கு இத்திருமந்திர மாநாடு சிறந்த தொரு சாதனமாகத் திகழ்க.

வாழ்க சைவம்! வாழ்க திருமந்திரம்!
வாழ்க திருமுறைகள்! வாழ்க மெய்கண்ட நூல்கள்!
வாழ்க மடாலயங்கள்! வாழ்க உலகெலாம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
ஆழ்க தீயது; எல்லாம் அரன் நாமமே
சூழ்க; வையகமும் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

உ

குருவே சிவம்

திருச்சிற்றம்பலம்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

திருச்சிற்றம்பலம்

ஞானசம்பந்தம் பிரஸ், தருமபுரம்